இணைப்பு

[239-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 218-க்கான விடையைக் காண்க.]

விடை.

ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்கள், இந்திய அரசு பின்பற்றும் கொள்கையின் அடிப்படையில், தனியார் அல்லது, வணிக நிறுவனங்களின் வேலை ஏற்றுக் கொள்வதற்கு பின்வருவன குறித்து ஆய்வு செய்வதற்குட்பட்டு, அனுமதி வழங்கப்படலாம் என்று அரசு 1977 ஏப்ரலில் ஆணை பிறப்பித்துள்ளது.

(a) ஏற்றுக் கொள்ளத் தகுதியுள்ள வேலையின் தன்மையும் தொழிலதிபரின் பூர்வீகமும்.

(b) ஓய்வு பெற்ற அரசு பணியாளர் ஏற்கத் கருதியுள்ள வேலையில் அவருடைய கடமைகள் அரசுடன் தகராறு வைத்துக் கொள்ளக்கூடிய தன்மையானவையா என்பது.

(c) ஓய்வூதியர், பணியிலிருக்கையில் எவரிடம் இப்போது வேலை நாடிச் செல்லக் கருதியுள்ளாரோ அந்தத் தொழிலதிபரிடம், எந்த ஒரு விவகாரம் வைத்திருந்து, அந்த ஓய்வூதியர், பணியிலிருக்கும்போது அந்தத் தொழிலதிபருக்குச் சலுகைகள் காட்டியிருந்தார் என்னும் சந்தேகத்திற்கு நியாயமான ஆதாரம் உள்ளதா என்பது.

(d) உத்தேச வணிக நிறுவன வேலையின் கடமைகள் அரசுத் துறைகளுடன் தொடர்பான பணிகள் அல்லது ஒப்பந்த பணி சம்பந்தப்பட்டதா என்பது.

(e) அரசின் கீழ் அவர் வகித்து வந்த பதவி காரணமாக அடைந்த அறிவு அல்லது அனுபவம், உத்தேசத் தொழிலதிபருக்கு நியாயமற்ற வகையில் அனுகூலமளிக்கப் பயன்படுத்தப்படும் என்கிற வகையில் அவருடைய வணிக நிறுவனக் கடமைகள் அமையும் என்பது.

(f) உத்தேசத் தொழிலதிபர் கொடுப்பதாக சொல்லும் ஊதியங்கள்.

(g) வேறு ஏதாகிலும் முகாந்திரம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS